**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.84 & 85 /2024- PW-1**

| | |
|---|---|
| Name | திரு. ஜெயக்கொடி |
| Husband/Father Name | சேகர் |
| Village /Area | பள்ளூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 50 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 04.07.2025.

**(எதிரிகள் 1 முதல் 8 ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். என் மகன் ஸ்ரீபெரும்புதூர் பெயிண்ட கம்பனியில் வேலை செய்து வந்தார். வேலை செய்து எனது கணவர் இறந்த பிறகு எனது குடும்பத்தை காப்பாற்றி வந்தார். 19.06.2021 அன்று எனது மகன் வேலைக்கு சென்று வந்து வீட்டிற்கு வந்து படுத்துவிட்டார். மறு நாள் விடுமுறை என்பதால் எனது மகன் கௌதம் வீட்டில் இருந்தார். சுமார் மதியம் 02.30 மணிக்கு மேல் அவருக்கு கைப்பேசியில் அழைப்பு வந்தது ஏற்கனவே விமல் என்பவர் பருவமேடு கிராமம் அருகே இறந்து கிடந்ததற்கு என் மகன் தான் காரணம் என்று தவறாக எதிரிகள் அனைவரும் எனது மகனை மிரட்டி கொண்டிருந்தார்கள் என்று என் மகன் என்னிடம் கூறி வந்திருந்தார். அன்றைய தினம் வெளியில் சென்ற என் மகன் வராததால் பிற்பகல் 03.30 மணிக்கு எனது மூத்தார் குமார் என்பவருடன் எங்கள் கிராமத்தை சேர்ந்த தனபால் பம்பு செட் அருகே எனது மகன்

கௌதம், டில்லி, கோகுல் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது இரு சக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களுடன் அருகில் இருந்த புதரில் இருந்து வந்த பகத், திலிப், சரத் மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரும் எனது மகனை கத்தியால் தலையில் வெட்டினார்கள். உடனிருந்த கோகுல், டில்லி ஆகியோர்கள் ஓடி விட்டார்கள். என் மகன் ஓட முயற்சித்த போது காலில் கத்தியால் வெட்டினார்கள். நான் சத்தம் போட்டேன் என் கண் எதிரே எதிரிகள் மாறி மாறி என் மகனை வெட்டி சாய்த்துவிட்டார்கள். சத்தம் போட்டவுடன் ஆட்கள் வருவதை பார்த்து அங்கிருந்து எதிரிகள் ஓடிவிட்டார்கள். என் மகன் அங்கேயே இறந்து விட்டான். இது சம்பந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அன்றைய தினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை :** இல்லை

**ஒம்./– திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**